# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## அதிகாரமளிக்கப்படாத வைப்பு ஏற்றல்

## ஆர் டி மீடியா எர்னிங் ஹப் (பிறைவட்) லிமிடெட் (PV 00222075)

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட விசாரணையொன்றினைத் தொடர்ந்து, 2025.11.17 அன்று இலங்கை மத்திய வங்கி பின்வரும் கம்பனியும் அதன் பணிப்பாளர்களும் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வைப்புக்களை ஏற்றுள்ளனர் என்பதை தீர்மானித்துள்ளது என சொல்லப்பட்ட சட்டத்தின் 42(10)ஆம் பிரிவின் கீழ் பொதுநலனுக்காக பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

(i). 2020 யூன் தொடக்கம் 2021 ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் இல.294, ஹை லெவல் வீதி, மாகும்புர, கொட்டாவ, பன்னிபிட்டிய எனும் முகவரியில் பதிவுசெய்யப்பட்ட ஆர் டி மீடியா எர்னிங் ஹப் (பிறைவட்) லிமிடெட் (PV00222075)

(ii). 2020 யூன் தொடக்கம் 2021 சனவரி வரையான காலப்பகுதியில் குறித்த கம்பனியில் முன்னாள் பணிப்பாளராகவிருந்த இல, 06/08, பலபொகுண வீதி, களுபோவில, தெஹிவளை எனும் முகவரியில் வதிகின்ற திருமதி. இஹல கிஹிம்பிய பதிரனகே ருவிந்தி தீக்ஷனா (936641440V); அத்துடன்

(iii). 2021 சனவரி தொடக்கம் 2021 ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் குறித்த கம்பனியில் பணிப்பாளராகவிருந்த இல, 09 சி, ஆனந்த பாலிகா வீதி, பிடகோட்டே எனும் முகவரியில் வதிகின்ற திரு. தசநாயக்க முதியன்செலாகே எரங்க மனோஜ் தசநாயக்க (942963963V)

அதற்கமைய, மேற்குறித்த ஆர் டி மீடியா எர்னிங் ஹப் (பிறைவட்) லிமிடெட்டையும், திருமதி. இஹல கிஹிம்பிய பதிரனகே ருவிந்தி தீக்ஷனாவையும் மற்றும் திரு. தசநாயக்க முதியன்செலாகே எரங்க மனோஜ் தசநாயக்கவையும்;

(i). 'பிணை வைப்புக்கள்', 'முதலீட்டு ஒப்பந்தங்கள்' என்பவற்றை வழங்குவதனூடாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்கக்கூடாது என்றும் அத்துடன்

(ii). கம்பனியினது எல்லா எஞ்சியிருக்கின்ற வைப்புப் பொறுப்புக்களையும் மீளச்செலுத்தவேண்டும் என்றும்

இலங்கை மத்திய வங்கி பணித்துள்ளது.


இலங்கை மத்திய வங்கி

இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01

☎ 011-2477504 011-2477738 @dsnbfi@cbsl.lk http://www.cbsl.gov.lk